**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 96/2019**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

வா.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரவிசங்கர் | த/பெ.: | ராமமூர்த்தி |
| கிராமம்: | மன்னார்குடி | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 53 | முகவரி: | எண் 18/33 காசுக்காரத்தெரு, மன்னார்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.01.2025

**<u>முதல் விசாரணை</u> :-**

நான் வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். மேற்படி வாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி வழக்கு விபரம் எனக்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணமாக எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நானும் எனது மனைவியும் மட்டும் பவர்பத்திரம் கொடுத்த தேதியிலிருந்து 2 நாட்களுக்கு முன்பு பவர்கொடுப்பது சம்பந்தமாக பேசி முடிவு செய்தோம் என்றால் சரிதான். நான் எனது மனைவியும் தனிக்குடித்தனமாக தான் உள்ளோம். 26.07.2018 ல் உணவுயிடைவேலையின் போது நானும் எனது மனைவியும் பொது அதிகாரம் கொடுப்பது தொடர்பாக பேசினோம். நானும் எனது மனைவியும் சிகிச்சை தொடர்பாக வெளிநாடு செல்ல உத்தேசித்திருந்த காரணத்தினால் நாங்கள் சீனிவாசனுக்கு பவர் கொடுக்க முடிவு செய்தோம். வெளிநாடு செல்லமுடிவு செய்ததால் நானும் எனது மனைவியும் மட்டும் தனிப்பட்ட முறையில் என் மனைவியின் சொத்துகளை பராமரிப்பதற்கு அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தோம். அந்த சமயத்தில் என்னையும் என் மனைவியும் தவிற வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை. நாங்கள் சுயவிருப்பத்தின் பேரில் தான் முடிவு செய்து சிகிச்சைக்கு செல்ல இருப்பதால் நம்பிக்கையான ஒருஆள் வேண்டும் என்பதன் அடிப்படையில் தான் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தோம். பவர் பத்திரம் எழுதிக்கொடுக்க எங்களை யாரும் எந்த தேதியிலும்

கட்டாயப்படுத்தவில்லை என்றால் சரிதான். பவர் பத்திரம் எழுதிக்கொடுப்பது தொடர்பாக 26.07.2018 அன்று இரவே சீனிவாசனிடம் தெரிவித்துவிட்டோம். பவர்பத்திரம் தயார் செய்வது சம்பந்தமான தொகைகள் அனைத்தும் என்னால் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். எனது சகோதரர் என் மனைவியை பொறுத்து 3 ம் நபர் என்பதால் ரூ. 10000/- க்கு மேல் செலவானது என்றால் தொகை எனக்கு சரியாக தெரியாது. என்னுடைய மேற்பார்வையில் தான் பவர்பத்திரம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மன்னார்குடியில் உள்ள ஆவண எழுத்தர்களை எனக்கு தெரியும் என்றால் என் தம்பியிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டேன் அவர்தான் ஆவண எழுத்தர்களை பார்த்தார். எப்போது பொதுஅதிகார ஆவணம் எழுதிக்கொண்டார் என்ற விபரம் எங்களுக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 27.07.2018 ம் தேதி இரவு போனில் தெரிவித்தார். அதன்பின்பு நாங்கள் என்ன நடவடிக்கை எடுத்தோம் என்றால் 29.07.2018 அன்று சார்பதிவாளர் அலுவலகம் சென்று விசாரிக்கும் போது தெரிந்துகொண்டு அன்றைய தினம் சார்பதிவாளர் அவர்களிடம் மனுகொடுத்தோம். அசல் ஆவணங்களை பார்வையிடாமலே பதிவுசெய்துள்ளார். நான் அசல்ஆவணம் என குறிப்பிடுவது கிரயபத்திரம் என்றால் சரிதான். பவர் பத்திரம் எழுதிக்கொடுக்கும்போது சார்பதிவாளர் அசல் ஆவணங்களை பார்வையிடாமலே எங்களுக்கு எதிராக பதிவு செய்துள்ளார். சார்பதிவாளரிடம் அசல் ஆணங்கள் இல்லாமல் பவர்பத்திரம் பதிவு செய்யமுடியது என்று நாங்கள் அப்போதே சார்பதிவாளரிடம் அட்சேபணை செய்தோம். அதையும்மீறி சார்பதிவாளர் பதிவு செய்தார். சார்பதிவாளரும் என் தம்பியும் சேர்ந்து அசல் பத்திரத்தை பார்வையிடாமலே எங்களுக்கு எதிராக பவர் பத்திரத்தை பதிவு செய்தது சம்பந்தமான மேல் அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தோமா என்றால் பதிவு தபால் மூலம் அறிவிப்பு அனுப்பினோம். எப்போது பதிவு தபால் அனுப்பினோம் என்றால் 30.07.2018 அன்று அனுப்பினோம். இது தொடர்பாக வழக்கறிஞரை எப்போது சந்தித்தோம் என்றால் 02.08.2018 ல் சந்தித்தோம். 02.08.2018 அன்று காலை 11.00 மணியளவில் வழக்கறிஞரை சந்தித்தோம். வழக்கறிஞரை சந்தித்த பிறகு அன்றைய தேதியில் பதிவு தபால் அனுப்பப்பட்டதா என்றால் மறுநாள் அனுப்பப்பட்டது. நான் அனுப்பிய பதிவு தபால் யார் யாருக்கு அனுப்பப்பட்டது என்றால் சார்பதிவாளருக்கு அனுப்பினோம். அவற்றை நாங்களே எங்கள் கைப்பட எழுதிஅனுப்பினோம். 1ம் பிரதிவாதி பெயரில் கிரயபத்திரம் ஏற்பட்டது எப்போது எனக்கு தெரியும் என்றால் கிரயம் எற்பட்ட 3 நாட்களுக்கு பின்பு தெரியும். 1ம் பிரதிவாதியே நேரில் வந்து சொன்னார். பவர் ரத்து பத்திரத்தை ரத்து செய்வது

சம்பந்தமாக சர்பதிவாளர் அலுவலகத்தில் நான் கொடுத்த ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பவர் பத்திரத்தை ரத்து செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன் அவர்பார்த்துகொள்வார் என்று இருந்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 4 ஒப்புதல் அட்டை எப்போது அனுப்பப்பட்டது என்றால் அதில் முத்திரை சரியாக தெரியவில்லை. தபால் அலுவலகத்தில் ஒரு அறிவிப்பை அனுப்பும் போது எங்கு அனுப்பப்படுகிறதோ அந்த தபால் அலுவலகத்தில் ஒரு முத்திரையும்மிடப்படும் என்றால் சரிதான். அப்படி வா.சா.ஆ. 4 ஒப்புதல் அட்டையில் தபால் நிலைய முத்திரைகள் எத்தனை உள்ளது என்று சாட்சி பார்த்துவிட்டு ஒன்றுதான் உள்ளது என்கிறார். வா.சா.ஆ. 4 ஒப்புதல் அட்டை இந்த வழக்கிற்காக தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ஆவணமானது தபால் நிலையம் மூலம் அனுப்பப்படவுமில்லை தபால் நிலையம் மூலமாக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உரிய தேதி தெரிந்தால் வழக்கு எதிராக மாறிவிடும் என்பதால் தான் தபால்நிலைய முத்திரை போன்று தெளிவற்ற நிலையில் முத்திரையிட்டு வா.சா.ஆ. 4 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானோ எனது மனைவியோ கைப்பட எழுதியதாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் அறிவிப்பு அனுப்பியதாக எந்தவித அஞ்சலக ரசீதும் இல்லை என்றால் சரிதான். கிரயபதிவு செய்துக்கொடுக்கும் வரை எனக்கும் எனது சகோதரருக்கு எந்தவித தனிப்பட்ட விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எங்களை பொறுத்தவரையில் நம்பிக்கையானவர் என்பதால் தான் என் தம்பிக்கு பவர்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் 2ம் பிரதிவாதி பின்னால் மாறிவிட்டார். 1ம் பிரதிவாதி என் மனைவியின் சகோதரரின் மகன் ஆவார். எங்களுக்கும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு சொத்து தொடர்பான பிரச்சனை இருந்துவருகிறது என்றால் சரிதான். இன்றை தேதிவரை எனது சகோதரர் மற்றும் பவர் ஏஜென்ட்டான 2ம் பிரதிவாதி மீது இன்றுவரை குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிருபண பிரமாணபத்திரத்தில் பக்கம் 2 பேரா 3ல் பவர்பத்திரம் பதிவு செய்யும்போதே அது பொது அதிகார ஆவணம் என்றும் சிறப்பு அதிகார ஆவணம் இல்லை என்றும் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். பொதுஅதிகார ஆவணத்தை நான் படித்துபார்க்கவில்லை. பத்திர அலுவலகத்தில் அவசரப்படுத்தியதால் கையெழுத்து செய்தேன். என்னுடைய பிரமாணபத்திரத்தில் சார்பதிவாளர் அசல்பத்திரத்தை பார்க்காமல்

பவர்பத்திரத்தை பதிவு செய்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நானும் எனது சகோதரரும் 1ம் பிரதிவாதியிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு கையடக்கம் செய்துகொண்டு தற்போது குடும்ப பிரச்சனைக்காக காழ்புணச்சி செய்துகொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தான் நானும் எனது மனைவியும் என் சகோதரர் மீது எந்தவிதமான குற்ற நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.01.03 18:35:19 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி